©
தமிழ்நாடு அரசு
2005

பதிவெண்: எம். 4.

# புதுக்கோட்டை மாவட்ட அரசிதழ்

## ஆணையின்படி வெளியிடப்பட்டது

புதுக்கோட்டை, ஏப்ரல் 14, 2005

சித்திரை 1, பார்த்திப, திருவள்ளுவர் ஆண்டு—2036 [ எண் 4

பொருளடக்கம்

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் அறிவிக்கை - - - | 17 | பொது அறிவிக்கை - - | 18 |

## மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் அறிவிக்கை.

### புதையல் அறிவிப்பு

*[இந்த அறிவிப்பு 1878 ஆம் ஆண்டு இந்திய அரசுப் புதையல் சட்டம் 5 (ஏ) பிரிவின்படி செய்யப்படுகின்றது.]*

*(ந.க. எண் ஆர்.3/53899/2004, 4—4—2005)*

(முதலாவது வெளியீடு)

இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால்.—புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், பெருங்குடி கிராமம், புல எண் 948/32 புன்செய் ஸ்தலத்திற்கு வடபுறத்தில் புதுக்கோட்டை வட்டத்திற்கு உட்பட்ட வெள்ளாற்றுப் பகுதியில் 2004 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 6 ஆம் நாளன்று கீழ்க்கண்ட புதையல் கண்டெடுக்கப்பட்டு அரசின் பொறுப்பில் இருக்கிறது.

### புதைபொருள் விவரம்

| வரிசை எண். | புதைபொருள் விவரம். | எடை. | மதிப்பு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | கி.கிராம். | ரூபாய். |
| 1 | பித்தளை உலோக பாவைவிளக்கு சிலை | 6.800 | 680 |

மேற்கண்ட புதைபொருள் தொடர்பாக உரிமை கொண்டாடுபவர்கள் அவர்களது உரிமையை தகுந்த ஆதாரங்களுடன் நேரிடையாகவோ அல்லது முறைப்படி அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி மூலமாகவோ 2005 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 7 ஆம் நாள் காலை 11 மணிக்கு திருமயம் வட்டாட்சியர் அலுவலகத்தில், புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களால் விசாரணை நடத்தப்படும்போது தெரிவித்துக் கொள்ளவேண்டியது.

புதுக்கோட்டை,
2005 ஏப்ரல் 4.

சி. பெரியசாமி,
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது).

# பொது அறிவிக்கை.

படிவம் 5

ஜப்தி

*(1864 ஆம் ஆண்டு 2 ஆவது சட்டம், 27 ஆவது பிரிவை அனுசரித்த ஜப்தி அறிவிப்பு)*

சிற்சில வட்டத்தைச் சேர்ந்த சிற்சில கிராமத்திலுள்ள அடியிற்கண்டவர்களுக்குப் பிறப்பிக்கப்பட்ட ஜப்தி நோட்டீஸ் என்னவென்றால்—அடியிற்கண்ட தொகையைச் செலுத்தும்படியாக கிரமப்படி எழுத்துமூலமாய் உங்களைக் கேட்டும் அந்தப் பாக்கியை நீங்கள் செலுத்தாமலும் அப்படிச் செலுத்தாமலிருந்ததற்கு தகுந்த முகாந்திரத்தை நீங்கள் தெரியப்படுத்தாமல் இருப்பதனாலும் உங்களுக்குச் சொந்தமான நிலங்களை இதன்மூலமாய் ஜப்தி செய்யப்பட்டிருக்கிறதென்றும் நீங்கள் செலுத்த வேண்டிய பாக்கியை வட்டியோடும் இதர செலவுகளோடும் அடியிற்கண்ட நாளுக்குள்ளாக செலுத்தாவிட்டால் மேற்படி நிலங்களைச்சட்ட விதிப்பிரகாரம் ஏலத்தில் விக்கிரயிக்கப்படுமென்றும் இதன்மூலம் நீங்கள் அறியவும்.

மேலும், இந்த ஜப்தி நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்ட நாள் முதல் இதனால் ஜப்தி செய்யப்படுகின்ற உங்களுடைய நிலங்கள் ஏலம் போடப்படும் நாள் வரைக்கும் ஜப்தி செய்யப்பட்ட நிலங்களின் பேரில் ஏற்படும் எல்லாத் தீர்வைகளுக்கும் நீங்களே உத்திரவாதியாய் இருக்கிறீர்கள். அந்த தீர்வைகளுக்கு உங்களுக்கே டிமாண்டு விட்டு உங்களிடத்திலிருந்தே வசூல் செய்யப்படும் இதையும் நீங்கள் அறியவும்.

(Rc. No. A3/3005/1997, 2–3–2005)

ஆலங்குடி வட்டம்

ஆலங்குடி கிராமம்

(விற்பனை வரிப் பாக்கி)

செலுத்த வேண்டிய நாள்—2005 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 7 ஆம் நாள்.

| பாக்கிதார் பெயர் | பாக்கித் தொகை ரூ. பை. |
|---|---|
| ஆர். தனக்கோடி, க/பெ. டி. நவமணி (வாரிசுதாரர்), சத்தியமூர்த்தி நகர், ஆலங்குடி. | 5,212 00-ம் 2 சதவீத வட்டியும். |

படிவம் 7-அ

நில ஏல விற்பனை

இதனால் அனைவருக்கும் தெரிவிப்பது என்னவென்றால்—அடியிற்குறிப்பிட்ட நிலங்களை தமிழ்நாடு 1864 ஆம் ஆண்டு 2 ஆவது சட்டப்பிரகாரம் அடியிற்குறிப்பிட்ட பாக்கிக்காக அடியிற்குறிப்பிட்ட நாளிலோ அல்லது ஏலம் ஒத்திவைக்கப்பட்ட வேறு நாளிலோ பகிரங்கமாய் ஏலம் போடப்படும். பாக்கிதாரராவது அல்லது அவரைச் சேர்ந்தவராவது அல்லது கீழ்க்கண்ட நிலங்களில் பாத்தியதை கொண்டாடுகிறவர்களாவது ஏல நாளுக்கு முந்திய நாள் சூரியாஸ்தமனத்திற்குள் பாக்கியை வட்டி முதலிய இதர செலவுகளுடன் செலுத்தினாலொழிய ஏலம் நிறுத்தப்படமாட்டாது.

ஆலங்குடி வட்டம்

ஆலங்குடி கிராமம்

(விற்பனை வரிப் பாக்கி)

ஏலம் போடும் நாள்—2005 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 7 ஆம் நாள்.

பாக்கிதார் பெயர்—ஆர். தனக்கோடி, க/பெ. டி. நவமணி (வாரிசுதாரர்), சத்தியமூர்த்தி நகர், ஆலங்குடி.

பாக்கித் தொகை—ரூ. 5,212-ம் 2 சதவீத வட்டியும்.

சொத்து விவரம்—ஆலங்குடி வட்டம், பட்டா எண் 667-ல் 0.025 ஏர்ஸ் மனையிடமும் அதில் உள்ள தார்சு வீடும்.

புதுக்கோட்டை,
2005 மார்ச் 2.

**ஆர். சத்தியராஜன்,**
கூடுதல் துணை வணிக வரி அலுவலர், எண் 2.

Last Auction Sale
dt. 24.3.10

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால் புதுக்கோட்டை அரசு கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.